www.xtrapapers.com

Cambridge O Level

**Cambridge International Examinations**
Cambridge Ordinary Level

**TAMIL** **3206/02**

Paper 2 Translation and Reading Comprehension **May/June 2015**

**1 hour 30 minutes**

INSERT

*9840517827-I*

**READ THESE INSTRUCTIONS FIRST**

This Insert contains the reading passage for use with the Question Paper.

You may annotate this Insert and use the blank spaces for planning.
This Insert is **not** assessed by the Examiner.

This document consists of **3** printed pages and **1** blank page.

DC (AC) 104063/3
© UCLES 2015

CAMBRIDGE International Examinations

www.xtrapapers.com



Read the following passage carefully and then answer, briefly and in **Tamil**, **Questions 3–12** on the Question Paper.

கல்லூரி மாணவி கவலையுடன் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டு தெருவில் அவசரமாக நடந்தாள். அவள் தன் நண்பர்களுடன் முந்தின நாள் இரவு வெளியே போயிருந்தாள். பிறகு காலையில் எழுந்திருக்க நேரமாகி விட்டது. அவளுக்கு முதல் வகுப்பு காலை 9.30 மணிக்கு இருந்தது. அவள் காலையில் போக்கு வரத்து நெரிசல்கள் அதிகமாக இருக்கும் என்றும் அதனால் நேரமாகலாம் என்றும் நினைத்து, பஸ்ஸில் போகாமல் குறுக்கு வழியில் நடந்து போகலாம் என்று தீர்மானம் செய்தாள்.

முதல் நாள் இரவு அவள் நண்பர்களுடன் ஒரு படம் பார்த்தாள். அந்தப் படம் ஒரு கிராமத்தில் வாழும் தாய், தந்தை உள் நாட்டு அரசாங்கத்துடன் தங்களுடைய குழந்தைகளுக்குத் தங்களால் முடிந்த அளவு பணம் கொடுக்கக்கூடிய பள்ளிக்கூடத்தில் இடம் கிடைக்க வேண்டும் என்று சண்டை போட்டார்கள். கடைசியில் இரண்டு வருடங்களுக்குப் பிறகு அந்த கிராமத்தில் இருக்கும் ஏழைக் குடும்பங்களுக்கு குறைந்த அளவு பணம் கொடுத்துப் படிக்க அனுமதி கிடைத்தது. இவர்களுடைய வெற்றியைப் பற்றி விளக்கும் படத்தைப் பார்த்தனர். அவர்களுடைய நண்பர்கள் பலவிதமானவர்கள். சிலர் நகரத்தில் வளர்ந்தவர்கள், மற்றவர்கள் சிறிய ஊர்களிலும் கிராமங்களிலும் வளர்ந்தவர்கள். இந்தப் படத்தின் முக்கியமான செய்தி எல்லாருக்கும் படிக்க வசதி கொடுக்க வேண்டும் என்பதே. கல்லூரி மாணவர்கள் எல்லாரும் அந்தக் கருத்தை ஆமோதித்துப் படத்தை விரும்பினர்.

கல்லூரிக்குப் போகும் தெரு அந்தப் பக்கத்தில் இருந்ததினால் அவள் வயலின் குறுக்கே வேகமாக நடக்க ஆரம்பித்தாள். அந்த நேரத்தில் பிச்சைக்காரர்களும் தெருவின் ஓரத்தில் கடை வைத்து சாமான்கள் விற்பவர்களும் இருக்க மாட்டார்கள் என்று நினைத்தாள். அவர்கள் இருந்தால் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கும் அவர்கள் கேட்பதைக் கொடுப்பதற்கும் மிகவும் கஷ்டமாக இருக்கும். எதிரில் பார்க்கும் போது கடைகள் ஒன்றும் இன்னும் திறக்கவில்லை. அதனால் அவள் பாதையில் இன்னும் வேகமாக நடந்தாள். ஆனால் பக்கத்தில் இருந்த புற்களில் இருந்து ஒரு சத்தம் வந்தது. ஒரு மிருகம் ஊளையிடுவது போல் சத்தம் கேட்டது. சுற்றிப் பார்க்கும் பொழுது அவளுக்கு ஒன்றும் தெரியவில்லை. ஆனால் அந்தச் சத்தம் மறுபடியும் கேட்டது – இந்தத் தடவை ஒரு குழந்தை அழும் குரல். பெரிய புற்கள் இருக்கும் இடத்தை நோக்கிப் போய், பாதையின் ஓரத்திலிருந்து எட்டிப் பார்த்தாள். அவள் கசங்கிப்போன பச்சை நிற கம்பளி ஒன்றைப் பார்த்தாள். கம்பளியும் புற்கள் போலவே பச்சை நிறத்தில் இருந்ததினால் பார்க்கத் தவறி விடலாம் என்று நினைத்தாள். குழந்தை அழுதபடியால் அது கம்பளி என்று தெரிந்தது. குழந்தை இன்னொரு தடவை அழுவது கேட்டது. அவள் கீழே குனிந்து புற்களை ஒரு ஓரமாகத் தள்ளும் போது, கம்பளிக்கு உள்ளே ஒரு குழந்தையின் தலையைப் பார்த்தாள். நிச்சயமாகக் குழந்தையை யாரோ வேண்டாமென்று விட்டிருக்கிறார்கள். அந்த மாணவி என்ன செய்வது என்று தெரியாமல் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். அவளுடைய வகுப்பைத் தவற விட வேண்டியிருக்கும். ஆனால் அவளுக்கு அந்தக் காலையில் அதைவிட முக்கியமான வேலை இருந்தது. முதல் நாள் மாலையில் பார்த்த படம்

www.xtrapapers.com



மாதிரி அந்தக் குழந்தைக்கு உதவி வேண்டியிருந்தது. கவனமாகக் குழந்தையைக் கம்பளியுடன் எடுத்துக் கொண்டு. சாமான்களை விற்கக் கொண்டு போகும் இரண்டு பெண்களைக் கூப்பிட்டு, போலிஸைக் கூப்பிடச் சொன்னாள்.

அரை மணி நேரத்திற்குப் பிறகு போலிஸ் வந்து குழந்தையைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பை எடுத்துக் கொண்டனர். மாணவி படத்தின் கருத்தை நினைத்துக்கொண்டு வீட்டிற்குத் திரும்பிப் போனாள், வீட்டிற்குப் போனபிறகு, மாணவி கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன் உள்ளூர் அரசாங்கத்தில் வேலை செய்ய வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டாள். அப்படிச் செய்தால் ஏழைக் குடும்பங்களின் கஷ்டங்களைக் குறைக்க முடியும் என்றும் பல குழந்தைகளுக்கு படிப்பு வசதிகளும் செய்து கொடுக்க முடியும் என்றும் நினைத்தாள்.

© UCLES 2015

www.xtrapapers.com



**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge International Examinations Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cie.org.uk after the live examination series.

Cambridge International Examinations is part of the Cambridge Assessment Group. Cambridge Assessment is the brand name of University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is itself a department of the University of Cambridge.

© UCLES 2015